# அருந்ததியர் இன மக்களுக்கு முதலமைச்சர் செய்த நன்மைகள்!

தி.மு.க. ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து, இன்றுவரை அதனுடைய முதன்மையான நோக்கமாக இருப்பது சமத்துவ சமூகத்தை உருவாக்குவது என்பதுதான். மனுதர்மத்தின் அடிப்படையில், பிறப்பின் அடிப்படையில், வாழிடத்தின், உணவு பழக்க வழக்கத்தின் அடிப்படையில் புறக்கணிக்கப்படும் மக்களுக்கு ஆதரவாக நிற்பது, சட்டபூர்வமாக அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது, விளிம்புநிலை மக்களை சமூகத்தின் மையமாக்குவது என்ற அடிப்படைக் கொள்கைகளிலிருந்து இன்றுவரை தி.மு.க. மாறவே இல்லை.



தமிழ்நாட்டில் வாழ்கின்ற ஆதிதிராவிடர் இன மக்களின் வாழ்க்கைத் தரத்தை எந்தெந்த வழியில் உயர்த்த முடியும், கல்வியில், வேலை வாய்ப்பில் அவர்களுக்கு எந்தெந்த விதத்தில் சட்டரீதியாகவும், சமூக ரீதியாகவும் உதவ முடியும் என்று சிந்தித்துச் செயலாற்றிவந்திருக்கிறது தி.மு.க. நீதிக்கட்சி முன்னிறுத்திய இடஒதுக்கீட்டு முறையை அமல்படுத்துவதில் முழுகவனம் செலுத்தியது. பொருளாதார ரீதியாகவும் கல்வி ரீதியாகவும், பின்தங்கியுள்ள மக்களை, குறிப்பாக இந்த மண்ணின் பூர்வகுடி மக்களான ஆதிதிராவிடர்களுக்கு உதவுவது ஒரு அரசின் கடமைதான் என்றாலும், தி.மு.க. அதில் கூடுதல் கவனமும் அக்கறையும் முழு ஈடுபாடும் கொண்டு செயலாற்றி வந்திருக்கிறது.

அடித்தட்டிலும் அடித்தட்டாக இருக்கின்ற அருந்ததியர் சமுதாய மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக தமிழ்நாட்டில் முதன்முதலாகக் குரல் கொடுத்தவர் எல்.சி. குருசாமிதான். 1885ல் பிறந்து 1966ல் மறைந்த எல்.சி. குருசாமி ஆதிதிராவிடர் மகாஜன சபை, மற்றும் அருந்ததியர் மகா ஜன சபை ஆகியவற்றின் உறுப்பினராகவும் பொது செயலாளராகவும் பணியாற்றியவர். நீதிக்கட்சி ஆட்சியில் 19201930 வரை 10 ஆண்டுகள் சென்னை சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக இருந்த காலத்தில், பெண்களுக்குக் கல்வி கட்டணச் சலுகை அளிக்க வேண்டும் என்று 1923ல் தீர்மானம் கொண்டுவந்தார். அருந்ததியர் இன மக்களுக்கு என்னென்ன தேவை என்பதைச் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் பேசினார். எல்.சி. குருசாமி முன்வைத்த கோரிக்கைகளையெல்லாம் நீதிக்கட்சியின் தொடர்ச்சியாக ஆட்சி செய்த அண்ணாவும், கலைஞரும், மாண்புமிகு மு.க.ஸ்டாலினும் நிறைவேற்றி யிருக்கிறார்கள். அருந்ததியர் இன மக்களின் வரலாறு கீழிலிருந்து எழுதப்பட்ட வரலாறு (History of Below) என்று சொல்லப்படுவதுண்டு. இனி அவ்வாறு சொல்ல முடியாது.

சமூகத்தின் கடைசிப் படிநிலையில் இருப்பவர்கள் பட்டியலின மக்கள். அதிலும் சமூக ஒதுக்குதல்களைக் கூடுதலாக சந்தித்து வருபவர்கள் அருந்ததியர் இன மக்கள்தான் என்பதை உணர்ந்து, தி.மு..க ஆட்சிக்கு வரும்போதெல்லாம் சிறப்புத் திட்டங்களைக் கொண்டுவந்தது. கலைஞரின் கவனம் எப்போதும் கடைக்கோடி மனிதர்கள் மீதே இருந்தது. இயல்பாகவே அவருக்கு சாதி ரீதியான ஏற்றத்தாழ்வுகள், மத ரீதியான, பொருளாதார ரீதியான ஏற்றத்தாழ்வுகள் இருக்கக் கூடாது. அப்படியிருந்தால் அது புற்று நோயைவிட, பெரு நோயைவிடக் கொடூரமானது என்பதை உணர்ந்தவர். அதனால்தான் அவர் எப்போதும் விளிம்புநிலை மக்களிடம் கூடுதலான அக்கறை கொண்டிருந்தார், அன்புகொண்டிருந்தார் என்பதற்கு பல உதாரணங்களைக் காட்ட முடியும்.

இன்றைய சூழலிலும் நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சிகளில் தூய்மைப் பணியாளர்களாகப் பணி செய்பவர்களில் பெரும்பாலானவர்கள் அருந்ததியர் இன மக்களாகவே இருக்கிறார்கள். அவர்களுக்குத் தொழில் ரீதியாக எந்தப் பாதுகாப்பும் இல்லை. பணியின் போது ஏற்படும் தொற்றினால் வரும் நோய் பாதுகாப்பு வசதியும் இல்லை. சமூகத்தைத் தூய்மைப்படுத்துகிறவர்கள், சமூகப் பாதுகாப்பற்றவர்களாக இருக்கிறார்கள், சமூகத்தில் யாரை விடவும் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் தூய்மைப் பணியாளர்களே என்பதை உணர்ந்த கலைஞர் 2007ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் முதன்முதலாக, 'தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தை அமைத்தார். மற்றவர்களை, வாரியத்தின் தலைவராக, துணைத் தலைவராக, உறுப்பினர்களாக நியமித்தால் அக்கறையுடன் செயல்பட மாட்டார்கள் என்று கருதி, அருந்ததியர் இன மக்களினத்தவர்களையே, வாரியத்தின் தலைவராகவும் துணைத் தலைவராகவும் உறுப்பினர்களாகவும் நியமித்தார்.

தமிழ்நாடு முழுவதும் பணியாற்றுகிற தூய்மைப் பணியாளர்களை வாரியத்தின் உறுப்பினர்களாக்குவது, பணியின் போது, உடல்நலக் கேடு, உயிரிழப்பு ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட பணியாளரின் குடும்பத்துக்கு வாரியத்தின் மூலம் நிதி உதவி செய்வது, கருணை அடிப்படையில் வாரிசுதாரர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவது, பணியின் போது பாதுகாப்பு வழங்குவது என்ற நெறிகளுடன் 'தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய'த்தை கலைஞர் ஆரம்பித்தார். முதற்கட்டமாகத் தனது சொந்த பணம் 50 லட்சத்தைத் தூய்மைப் பணியாளர் வாரியத்திற்கு வழங்கினார். தூய்மைப் பணியாளர் வாரியம் அமைக்கப்பட்ட பிறகு, தமிழ்நாடு முழுவதும் உள்ள பணியாளர்களுக்கு, உயிர் பாதுகாப்பு, தொழில் பாதுகாப்பு, உடல் ரீதியான, மனரீதியான மருத்துவம் சார்ந்த பாதுகாப்பு ஆகியவை உறுதி செய்யப்பட்டன. தூய்மைப் பணியாளர்கள் வாரியம் அமைக்கப்பட்ட பிறகு, அவர்களுக்கான உரிமைகள் குறித்த பேச்சு தமிழ்நாட்டில் எழுந்தது. அதற்குக் காரணமாக இருந்தவர் கலைஞர்தான்.



எழுத்தாளர்
**இமையம்**

**'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்பது பொது வழக்கு. 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண விரும்பவில்லை, ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கவே விரும்புகிறேன். மனுதர்மத்தாலும், புராண, இதிகாச, வாய்மொழி கடவுளர்களின் கதைகளாலும், மூடநம்பிக்கையாலும் சமூகத்தின் கடைக்கோடி மனிதர்களுக்குக் கைகொடுத்து, அவர்களை மேலே தூக்கிவிடவே விரும்புகிறேன்' என்று 2009இல் கலைஞர் அருந்ததியர் இன மக்களுக்கு மூன்று சதவிகித உள்ஒதுக்கீட்டைக் கொண்டு வந்தார். இந்த உள்ஒதுக்கீடு என்பது அருந்ததியர் இன மக்களின் வாழ்வில் மாபெரும் மாற்றத்தைக் கொண்டுவந்தது. உள்ஒதுக்கீடு வழங்கியது வாக்கு அரசியலுக்காகக் கொடுக்கப்பட்டதல்ல. அருந்ததியர் இன மக்களின் பிரதிநிதித்துவம் எல்லாத் துறைகளிலும் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். அரசு வழங்கும் வாய்ப்புகள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான்.**

2009இல் கலைஞரால் கொண்டுவரப்பட்ட உள்ஒதுக்கீடு வருவதற்கு முன்பு சட்டக் கல்லூரியில், பொறியியல், மருத்துவக் கல்லூரியில் அருந்ததியர் இன மாணவர்கள் எவ்வளவு பேர் படித்தனர்? உள்ஒதுக்கீடு கொண்டு வரப்பட்ட பிறகு சட்டக் கல்லூரியில் பொறியியல், மருத்துவம் மற்றும் உயர் கல்வியில் எவ்வளவு அருந்ததியர் இன மாணவர்கள் சேர்ந்து படித்துள்ளனர் என்ற ஒப்பீட்டைச் செய்தால்தான் உண்மை தெரியும். 2009இல் அருந்ததியர் மக்களுக்கான மூன்று சதவிகித உள்ஒதுக்கீடு சட்டம் கொண்டுவரப்படுவதற்கு முன்பு எவ்வளவு பேர் அரசு வேலையில் இருந்தனர் என்பதையும் உள்ஒதுக்கீடு கொண்டுவரப்பட்ட பிறகு அரசு வேலைகளில் எவ்வளவு பேர் சேர்ந்துள்ளனர் என்ற ஒப்பீட்டையும் செய்துபார்க்க வேண்டும். கலைஞரால் 2009இல் கொண்டுவரப்பட்ட உள்ஒதுக்கீட்டுச் சட்டம், அருந்ததியர் இன மக்களின் வாழ்க்கையில் எவ்வளவு பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது என்பதை தரவுகளின் அடிப்படையில் பார்க்க வேண்டும்.

2009க்கு முன் பிற இனத்தவர் 200 பேர் மருத்துவப் படிப்பில் சேர்ந்ததால், அருந்ததியர் இன மாணவர் ஒருவர்தான் சேரும்நிலை இருந்தது. ஆனால், 2009இல் கொண்டுவரப்பட்ட உள்ஒதுக்கீட்டின் மூலம் ஆண்டுக்கு 125 முதல் 150 அருந்ததியர் இன மாணவர்கள் மருத்துவப் படிப்பில் சேர்ந்தனர். முதல் தரம் வாய்ந்த பொறியியல் கல்லூரியில் ஆண்டுக்கு 1500க்கும் அதிகமான அருந்ததியர் இன மாணவர்கள் சேரும் நிலை உருவானது. சட்டக் கல்லூரி உயர் கல்வியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்தது. இந்நிலையை உருவாக்கியவர் கலைஞர்தான்.

2009க்கு முன்பு அரசு வேலை வாய்ப்பில் அருந்ததியர் இனத்தவர்களுக்குக் கிடைத்த வாய்ப்புகளை விட, மூன்று சதவிகித உள்ஒதுக்கீட்டின் மூலம் கணிசமாக அரசு வேலைவாய்ப்பில் இடம்பிடித்தனர், 2009க்கு முன்பு தமிழ்நாட்டில் ஆறு பேர் என்றளவில்தான் துணை ஆட்சியர்கள் இருந்தார்கள். ஆனால், தற்போது 30க்கும் அதிகமானவர்கள் துணை ஆட்சியாளர்களாகப் பணிபுரிகின்றனர். 10க்கும் அதிகமான மாவட்ட வருவாய் அலுவலர்கள், 1000க்கும் மேற்பட்ட வருவாய் அலுவலர்கள், 2200க்கும் அதிகமான கிராம நிர்வாக அலுவலர்கள் என்ற அளவில் பணியாற்றிவருகின்றனர். மருத்துவத் துறையிலும் பள்ளிக்கல்வி, உயர் கல்வி, நெடுஞ்சாலை துறை, நகராட்சி நிர்வாகம் என்று அனைத்துத் துறைகளிலும் அருந்ததியர் இன மக்களின் பங்கேற்பு என்பது கணிசமான அளவில் உயர்ந்துள்ளது. இது கலைஞர் என்ற சமூக சிந்தனையாளரால் ஏற்பட்டது. கலைஞர்கள், எழுத்தாளர்கள், சிந்தனை யாளர்கள், சமூகப் போராளிகள் எப்போதும் விளிம்புநிலை மக்களின் மீதே எப்போது அக்கறை கொண்டிருப்பார்கள் என்பதற்கு அருந்ததியர் இன மக்களுக்கான மூன்று சதவிகித உள்ஒதுக்கீடு சாட்சியமாக இருக்கிறது.

**கலைஞர்தான் அருந்ததியர் இன மக்களுக்கு நன்மைகள் செய்தார் என்றில்லை. தமிழ்நாட்டின் தற்போதைய முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலினும் செய்திருக்கிறார். சமூகத்தின் கடைக்கோடி மனிதன் மீது ஸ்டாலின் அரசு தனிக்கவனம் கொண்டிருக்கிறது என்பதற்கு நிறைய சான்றுகள் இருக்கின்றன. சமூகம் யாரையெல்லாம் நினைவில் கொள்ள வேண்டும் என்பதிலும், தமிழ்ச் சமூகத்திற்காக யார் யாரெல்லாம் உழைத்தார்களோ, அவர்களை அரசும், சமூகமும் எப்போதும் நினைவில் வைத்துக் கொண்டாட வேண்டும் என்ற அடிப்படையிலும் செயல்பட்டு வருகிறார்.**

ஈரோடு மாவட்டம், கொடுமுடி ஊராட்சி ஒன்றியம் கொங்குடையாம் பாளையம் ஊராட்சி, கொல்லான் வலசு கிராமத்தில் பிறந்த பொல்லான், தீரன் சின்னமலையின் போர்ப் படைத்தளபதியாக இருந்தவர் ஆங்கிலேயர்களை எதிர்த்து 1801இல் பவானியில் நடைபெற்ற போரிலும் 1802இல் சென்னிமலையில் நடைபெற்ற போரிலும், 1803இல் அரச்சலூரில் நடைபெற்ற போரிலும் தீரன் சின்னமலை வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்தவர். இவர் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர். சுதந்திரப் போராட்டத் தியாகி. பொல்லானின் தியாகத்தை நினைவுகூரும் வகையில் 26.11.2025 அன்று, ஈரோட்டில், மாவீரன் பொல்லான் அரங்கத்தையும் மணிமண்டபத்தையும் ரூபாய் பத்து கோடி மதிப்பீட்டில் அமைத்தார். மு.க. ஸ்டாலின். வாய்ப்பு எங்கெல்லாம் ஏற்படுகிறதோ அங்கெல்லாம் அருந்ததியர்களுக்கு வழங்கினார். தமிழ்நாட்டில் 'தமிழ்நாடு மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையம்' அமைக்கப்பட்ட போது, அதிலும் அருந்ததியர்களுக்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தார்.

**அருந்ததியர் இன மக்களுடைய வீரத்திலகங்களாகப் போற்றப்படுகிற குயிலி, மதுரைவீரன், ஒண்டி வீரன், சேர்வாரன், எல்.சி. குருசாமி, பொல்லான் போன்றவர்களுடைய வரலாற்றைப் பாதுகாப்பதோடு அருந்ததியர் இன மக்களுடைய சமூக, பண்பாட்டு வேர்களையும் பாதுகாக்க வேண்டும் என்பதில் முதலமைச்சர் உறுதியாக இருக்கிறார்.**

தமிழ்நாட்டில் முதன்முதலாக அருந்ததியர் இன மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகளைக் கட்டித் தந்தார். தூய்மைப் பணியில் ஈடுபட்டிருக்கும்போது, இறந்தால், இழப்பீட்டுத் தொகையாக ரூபாய் 10 லட்சம் வழங்கும் திட்டத்தை மு.க. ஸ்டாலின்தான் கொண்டுவந்தார்.

**இந்தியாவிலேயே தூய்மைப் பணியாளர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தையும் அவர்தான் கொண்டுவந்து நடைமுறைப்படுத்தினார். தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தை உருவாக்கினார். இந்த வாரியத்தால், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் தூய்மைப் பணியாளர்களுக்கும் உறுப்பினர் அட்டை, தொழில் பாதுகாப்பு, மருத்துவப் பாதுகாப்பு, காப்பீடு போன்றவற்றை நடைமுறைப்படுத்தவும், கண்காணிக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்.**

**அருந்ததியர் இன மக்களுக்கு மட்டுமல்ல, சாதி ரீதியாக எந்த இன மக்கள் ஒடுக்கப்படுகிறார்களோ, கல்வியில், வேலை வாய்ப்பில் எந்த மக்கள் பின்தங்கி யிருக்கிறார்களோ, அவர்களுக்கு தி.மு.க.வும், தி.மு.க. அரசும் எப்போதும் துணை நிற்கும் என்பதைத்தான் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் சட்டங்களும் திட்டங்களும் உறுதிப்படுத்துகின்றன.**

காலம் காலமாக எந்த மக்கள் புறக்கணி க்கப்பட்டார்களோ உழைப்புச் சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டார்களோ, சமூக அவமானத்திற்கு ஆளாக்கப்பட்டார்களோ அந்த மக்களுக்காக தி.மு.க.வின் அரசு துணை நிற்கும் என்பதைத்தான் மு.க. ஸ்டாலினின் செயற்பாடுகள் நிரூபித்து வருகின்றன. ஏழைகளின் கண்ணீரை இறைவன் ஒருபோதும் துடைத்ததில்லை. ஆனால், ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பது மட்டுமல்ல, ஏழைகளின் கண்களில் இனி கண்ணீர் வரவே கூடாது என்பதற்காகத்தான் மு.க. ஸ்டாலின் உழைத்துவருகிறார் என்பதை வரலாறு காலந்தோறும் சொல்லும்.

---


மாவட்ட அளவில் சமூக வலைதளப் பொறுப்பாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு

## 234 தொகுதிகளுக்கும் கழக மாணவர் அணி சார்பில் வாட்சப் குழு ஏற்படுத்தி தேர்தல் பிரச்சாரம்!

### கழக மாணவர் அணி கூட்டத்தில் தீர்மானம்! ஆ.இராசா எம்.பி. சிறப்புரை! திருமதி. ஜெ.வீரமணி தலைமை!

சென்னை, மார்ச் 22 –

தி.மு.க. மாணவர் அணி மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர் சமூக வலைதள பொறுப்பாளர்கள் பயிற்சிக் கூட்டம் நேற்று முன் தினம் (20.03.2026 வெள்ளிக்கிழமை) காலை 10 மணி அளவில் சென்னை எம்.சென்ட்ரல் அரங்கில் கழக மாணவர் அணி செயலாளர் திருமதி ஜெ.வீரமணி தலைமையில், கழக மாணவர் அணி பொறுப்பாளர் மேனாள் அமைச்சர் ஆ.ராசா எம்.பி. அவர்கள் சிறப்புரை வழங்கிட கழக மாணவர் அணி துணை செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா. தமிழரசன், தமிழ் கா. அமுதரசன், வி.ஜி.கோகுல், பி.எம். ஆனந்த், ஜெ.ராமகிருஷ்ணன், ஆர். சுரேஷ்குமார் முன்னிலையில் நடைபெற்றது.




கழக தகவல்தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் பா.கேசவன் சமூகவலைதள பயிற்சி அளித்தார். அதில் தி.மு.க. மாணவர் அணி மாவட்ட மாநகர, மாநில அமைப்பாளர் மற்றும் சமூக வலைத்தள பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் நிறை வேற்றப் பட்ட தீர்மானங் கள் வருமாறு:–

**தீர்மானம் :1**

**இரங்கல் தீர்மானம்**

மொழிப்போர் தளபதி அய்யா எல்.ஜி. மறைவு.

மாணவர் பருவத்தில் இருந்து திராவிட இயக்க கொள்கைகளை ஏற்று தன்னை தி.மு.க.வில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். மாணவர் தி.மு.க.வில் உறுப்பினராக இருந்து மாணவர் சமுதாயத்திற்காக குரல் கொடுத்தவர். தி.மு.க. மாணவர் அணி செயலாளராக இருந்து மொழிப்போரில் பங்கேற்ற போராளி. அய்யா எல்.ஜி மறைவுக்கு தி.மு.க. மாணவர் அணி ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம்: 2**

கழக மாணவர் அணியின் முதல் பெண் செயலாளராக திருமதி ஜெ. வீரமணி அவர்களை நியமித்த மைக்கு கழகத் தலைவர். கழகப் பொதுச் செயலாளர், கழக இளைஞர் அணி செயலாளர் ஆகியோருக்கு இக்கூட்டத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

**தீர்மானம்: 3**

2026–ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் கழக மாணவர் அணி மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி நிர்வாகிகள் தாய்க்கழகத்தோடு இணைந்து பணியாற்ற அவர்களோடு மண்டல வாரியாக மாநில நிர்வாகிகள் ஒருங்கிணைக்க இக்கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டது.

**தீர்மானம்: 4**

கழக மாணவர் அணி சார்பாக கல்லூரிகளில் அமைக்கப்பட்ட "தமிழ் மாணவர் மன்றம் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களை 2026–ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் பரப்புரைக்கு முழுமையாக பயன்படுத்த இக்கூட்டத் தில் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம்: 5**

மாவட்ட அளவில் மாணவர் அணி சமூக வலைதள பொறுப்பாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு தேர்தல் பணியாற்றவும். 234 தொகுதிகளுக்கும் கழக மாணவரவணி சார்பில் DSW வாட்சப் குழு ஏற்படுத்தி அதில் கல்லூரி மாணவர்கள் மற்றும் நிர்வாகிகளை இணைத்து தேர்தல் பிரச்சாரத்தை சிறப்பாக செய்ய இக்கூட்டத்தில் தீர் மானிக் கப்பட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

---

## தோல்வி பயத்தில் கரூரில் அ.தி.மு.க.வினர் அவதூறு!

### துணைத் தேர்தல் அதிகாரியிடம் கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் புகார்!

*கரூர், மார்ச் 22 -*

*தோல்வி பயத்தில் கரூரில் அ.தி.மு.க. அவதூறு பரப்பி வருகிறது என துணை தேர்தல் அதிகாரியிடம் கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் புகார் மனு அளிக்கப்பட்டது.*

*கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் துணை தேர்தல் நடத்தும் அதிகாரிடம், துணை மேயரும் மேற்கு மாநகர பகுதி செயலாளருமான தாரணி சரவணன், மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், ஒன்றிய செயலாளர்கள் வேலுச்சாமி, முத்துக்குமாரசாமி, பகுதி செயலாளர் ஆர்.எஸ்.ராஜா, ஜோதி பாசு, வெங்கமேடு பாண்டியன், வழக்கறிஞர் சுப்பிரமணியம், விஜிஎஸ்.குமார், உள்ளிட்ட நிர்வாகிகள் கோரிக்கை மனு அளித்தனர்.*

*பின்னர் செய்தியாளர்களிடம் துணை மேயர் தாரணி சரவணன் கூறிய தாவது:*

*திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் 9பணி மனைகள் அமைக்கப்படுகின்றன. தேர்தல் காலங்களில் பொதுவாக அரசியல் கட்சி வேட்பாளர்கள் சுயேச்சை வேட்பாளர்கள் செட் அமைப்பாளர்கள். தவிர சொந்தக்காரணங்களுக்காக கால்நடைகள் அடைப்பதற்கு, பழனி பாதயாத்திரை குழுவினர், இல்ல நிகழ்ச்சிகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளுக்கு செட் அமைக்கிறார்கள். ஆனால் எல்லாமே தி.மு.க. தான் அமைக்கிறார்கள் என்று தவறாக அ.தி.மு.க. வினர் கூறி வருகின்றனர்.*

*இதுபோல் குற்றம் சாட்டுவது அ.தி.மு.க.வின் தோல்வி பயத்தை காட்டுகிறது. கடந்த இரண்டு மாதங்களாக அதிமுக மாவட்டச் செயலாளர் ஊர் ஊராக போய் பிரச்சாரம் செய்கிறார். எந்த இடத்திலும் மக்கள் வரவேற்பு இல்லை. கூட்டமில்லை. எழுச்சி இல்லை. அதனால் வெறுப்பின் உச்சத்துக்கே போய் தி.மு.க.வின் மீது அவதூறு குற்றம் சாட்டுகிறார்.*

*கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நல் ஆட்சியில் ஏராளமான நலத்திட்டங்களை வரலாற்றில் இல்லாத அளவிற்கு மாவட்ட கழகச் செயலாளர் செந்தில் பாலாஜி ரூ.5000 கோடி அளவிற்கு மாவட்டத்திற்கு வளர்ச்சித் தி ட்டங்களை கொண்டுவந்துள்ளார்கள். புதிய பேருந்து நிலையம், வேளாண்மைக் கல்லூரி, அரசு கலைக் கல்லூரிகள், பாலங்கள், மாவட்ட மைய நூலகம், கரூர் ஈரோடு சாலை, கரூர் கோவை சாலை, டைடல் பார்க் என பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தி.மு.க. அரசு கொண்டு வந்ததை பொறுக்க முடியவில்லை. அனைத்து தெருக்களும் சாலைகளும் பளிச் என்று புதியதாக காணப்படுகிறது.*

*நாம் நின்று கொண்டிருக்கிற இந்த 48 வந்து வார்டுக்கு மட்டும் கரூர் மாநகராட்சி சார்பில் ரூ.17 கோடி செலவில் வளர்ச்சி பணிகள் நடைபெற்று இருக்கின்றன. கரூர் மாநகராட்சிக்கு மட்டுமே ரூ. ஆயிரம் கோடி நிதியை செந்தில் பாலாஜி பெற்றுத் தந்துள்ளார்கள். மிகவும் சிறப்பாக வளர்ச்சி பணிகளை நிறைவேற்றி இருக்கிறோம்.*

*அ.தி.மு.க. ஆட்சி சாதனைகள் என்று சொல்வதற்கு ஒன்றுமே இல்லை. மருத்துவக் கல்லூரி கூட இவர் கொண்டு வந்தது தான்.*

**தரங்கெட்ட பேச்சு**

*வெங்கமேட்டில் அனுமதியே வாங்காமல் பிரச்சாரம் செய்திருக்கிறார்கள். இது போன்று பிரச்சாரம் செய்து பிரச்சினை உருவாக்கி விரும்பத் தகாத நிகழ்வுகள் ஏற்படுத்தி அதை தி.மு.க. மீது பழி போடலாம் என நினைக்கிறார்கள். இப்படித்தான் ஒவ்வொரு இடத்திலும் நடக்கிறது. ஆர்ப்பாட்டம் என்கிற பெயரில் பெண்களை இழிவுபடுத்தி முருங்கைக்காய், பூசணிக்காய், கத்தரிக்காய் என அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் பேசியிருக்கிறார். ஒரு முன்னாள் அமைச்சர் பேசுகிற பேச்சா இது?. அவர் ஒரு தரமான ஆள் இல்லை என்பதை காட்டுகிறது.*

*எப்போதுமே கரூர் மாவட்டம் தி.மு.க.வின் கோட்டை.4 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம் தமிழ்நாட்டில் மீண்டும் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சி அமையும் இது உறுதி.*

*இவ்வாறு அவர் கூறினார்.*